கணபதி துணை

# கந்தகானாமுதம்

## கோடீஸ்வரய்யர் இயற்றிய

## 72 மேளராகர்த்தா கீர்த்தனைகள்

# விநாயகர் துதி

## நேரிசை வெண்பா

பண்ணிறைந்த மேளமெழு பத்திரண்டிற் பன்னு தமிழக்
கண்ணிறைந்த கந்தகானாமுதத்திற்
குண்ணிறைந்த மாமதுரைப் பொற்றா மரைவாழ்
மாமுகதா பாமதுர மெட்டுப் பதம்

## காப்புப்பாடல்

இராகம் ஹம்ஸத்வனி (மேளம் 29ல் ஜன்யம்) -- ரூபக தாளம்
ஸ ரி க ப நி ஸ -- ஸ நி ப க ரி ஸ

பல்லவி

வாரணமுகவா துணை வருவாய்
அருள்வாய் தயவாய்(வா)

அனுபல்லவி

ஆரணப் பொருளான கந்த கானாமுதத்திற்குன்
கருணாமுதம் உதவியே அருள் மத(வா)

சரணம்

இன்னிசை இயல் இலக்கியம் ஆரியம் தமிழ் அறிவேது மின்றிக்
கன்னல் அன்ன இக்கந்த கானாமுத நன்னூலை
உன்னும் கவிகுஞ்சர தாஸன் நான்
உன் அருள் கொண்டே பண்ணத் துணிந்தேன்
முன்னவனே நீ முன்னின்றால் முடியாததொன்றில்லை
ஆதலால் அதிவேகமதாகவே அருள் மத(வா)

# சுத்த மத்தியம மேள கிருதிகள்

மேளம் ஒன்று – கனகாங்கி -- ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

கனகாங்க கா ஸுகா குஹா
தினம் கா முருகா திருமான் மருகா

அனுபல்லவி

அனகா அமல பன்னகா பரண
ஹரகுரு பராத்பரா சுபகரா

சரணம்

அடியேன் நான் உய்ய அருள்வாய் நீ துய்ய
அமித ஸத் புத்தி அபரிமித பக்தி
யோடும் நின்னை ஏத்தி உயர்குமர கீர்த்தி
யுற கவிகுஞ்சர தாஸனேனை

மேளம் இரண்டு – ரத்னாங்கி -- ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி

பல்லவி

தருணம் இதே தயாநிதே
அருள் செய்யவே அடியேன் உய்யவே

அனுபல்லவி

அருமைத் திருமால் மருகா முருகா
அருள் வாக்கருள்செய் தெனை யாளவே

சரணம்

நான் உந்தனை ரத்தி நாங்க நாளும் நத்தி
ஞான கான ஸித்தி நாதபாத பக்தி

நற்குஞ்சர தாஸன் நான் அடைந்துன் நேசன்
ஆகியே நானும் ஓர் ஆளாகவே

மேளம் மூன்று – கானமூர்த்தி –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

மா மதுர ஸாரஸ ஸரஸ
மா ஸத்குண நிதி நீயே கதி

அனுபல்லவி

பா மதுராபுரி மீனாக்ஷி யருள்
பாலா வடிவேலா சுகசீலா மிகு கோலாகல

சரணம்

தாருநிகர் உதாரதீர கன கம்பீர வீர மாரஸ்ரீ
ஸுப்ரமண்ய மூர்த்தி கார்த்திகேய மூர்த்தி
கல்யாண மூர்த்தி காங்கேய மூர்த்தி
கானமூர்த்தி கவிகுஞ்சரதாஸன் ஆப்த மூர்த்தி

மேளம் நான்கு – வனஸ்பதி –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

தாசநேச குஹேசனே நிஜ
தேஜனே க்லேசநாசனே சதா நினை (ச தாஸ)

அனுபல்லவி

வாஸவாதி வந்தித பாத வேத கீத

சரணம்

தீனனேன் நாம் பூங்கொடி கான வனஸ்பதே
புத்திபதே தீம் தேன்கவிதே குஞ்சரதாஸன் தேவதே

மேளம் ஐந்து – மானவதி –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

நிஜபக்தி நித்யானந்தம் தா கந்தா

அநுபல்லவி

அஜவாஹனா ஞானாகனாகன

சரணம்

வாஸமலரோடு சொல் மாமண
மலரால் வர கவி குஞ்சர
தாஸ விஸ்வாசநின் பூஜை
நேசம் அற ரம்ய மானவதி

மேளம் ஆறு – தானரூபி –– கண்டசாபு தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

வா வேலவா வா மாவல வா

அனுபல்லவி

வா தேவாதிதேவா மஹானுபாவா

சரணம்

வா மரகதமயூர வாஹன
மோஹன மாகனா நாகநாதா
வா ஸதா முதகீத தானரூப
வா மதுர கவிகுஞ்சர தாஸ விஸ்வாஸ

மேளம் ஏழு – ஸேனாவதி –– மிச்ரசாபு தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

வந்தருள் நீ தா அனாதநாதா

அனுபல்லவி

மந்திர வேத தந்திர கீத
சுந்தர ஸுபோத ஸுகாதீத

சரணம்

நாயினும் கடையேன் நான் ஆயினும்
ஸேனாபதி பசுபதி ஸ்ரீபதி துதி
கருணாநிதி நீ கதியாமெனவே மதி

திதி கவி குஞ்சர தாஸன் உய்ய ததி

மேளம் எட்டு – ஹனுமத்தோடி –– மிச்ரசாபு தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி

பல்லவி

கலி தீர வந்தருள் சுகுமாரா

அனுபல்லவி

மலி வார விஜய நவவீரரோடுலக்க
வீர ஸோதர பரிவார

சரணம்

அறுமுகவ அடியேன் படுதுயர்களை பவ
இவ் வனும தோடி க்கருள் இபமுக துணைவா
அறுகரவ சடையர புத்திரா பார்த்திபா
அவிநவ கவிகுஞ்சர தாஸன்

மேளம் ஒன்பது – தேனுகா –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

கருணைக் கடலே கைவிடேல்

அனுபல்லவி

தெருள் நல் பொருள் நல் திரு மெய்த்திட
தர பக்தி அருள் சரண் உற்றிட

சரணம்

வன மோகனமான் அருள் மாதருள் தேன்
நினைமாவின் இதம் தெரி மோகிதனே
கனமோகன மாமயில் வாகனனே
மனமோகன மால் மருகா குகனே
தினமோதனமோடருள் மாதனமே
திருமாமயிலை அறுமாமுகனே
கன காம தேனுகா வென இனுமே
கவிகுஞ்சர தாஸனுக் கருள் நலமே

மேளம் பத்து – நாடகப்ரியா –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சதுச்ருதி த, கைசிகி நி

பல்லவி

இரங்காதா ஸாமிநாதா நின் திருவுள்ளம்
ஏழையென் மீதிப்போது

அநுபல்லவி

பரம் கா தா வரம் வரதா ரதா ஸதா முதா
புரம் காய்ந்த ஸதாசிவ ஸ்ூதா உதார தாதா

சரணம்

தயா ஸத்குணாலய நாடக
ப்ரியா பேதையேன் ஐயா நம்பினேன்

நயா நற்கவி குஞ்சரதாஸனையாள
நல் வேளையாம் இதில்

மேளம் பதினொன்று – கோகிலப்ரியா –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

சுகவாழ்வடைந்துய்வாய் செய்வாய் துதி மனமே நீ

அனுபல்லவி

மகவான் மகள் மான் மகள்
மணவாளனையே ஏழை பங்காளனை

சரணம்

மகரந்தம் தங்கும் தண் பொழில் பொங்கும் தென் செந்திற்
குமரன் தன் செம்பொன்னம்புஜபதமே மேவும்
அகமும் பண் தண் கோகிலப்ரியமும் கொண்டன் பின்பம்
பெருக உல்லாச கவி குஞ்சர தாஸ

மேளம் பன்னிரெண்டு – ரூபாவதி –– ஆதி தாளம்
ஸா, சுத்த ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

நாளாகுதே நாதா விரதா வா

அனுபல்லவி

தாளாதரம் தர வேலவா நீன்
வேளானுகூலம் வாராமல ஏன்

சரணம்

பாடாமல் நின் பொன் அடிமலர்
சூடாமல் பரகதி நாடாமல்
வேடாரதி ரூபாவதி

வேளா கவிகுஞ்சர தாஸன

மேளம் பதிமூன்று – காயகப்பிரியா –– கண்டசாபு தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

நாதநிலை கண்டுருக நான் அருகனா
நாத நினதருள் வலியினால் அலதெனால்

அனுபல்லவி

ஓது சரியை கிரியை யோக ஞான பரனா நான்
மோகன மனோஹரகுஹ கனா நல்

சரணம்

ஏழிசை லய சுருதிலய யாழ் குரல் ஏழு கனநய
தேசிக தசவிதமா கமக கானம்
வாழும் அன்பொடின் புறமதுர கவிமதகஜ
தாஸ காயகப்பிரியனயா நீ ப்ரியா முற

மேளம் பதிநான்கு – வகுளாபரணம் –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி

பல்லவி

நம்பினேன் ஐயா நாதா நின் பாதம்

அனுபல்லவி

துன்பவேலை தீர்ந்து இன்பவேலை ஆர்ந்து
நின் பொன் வேலை ஓர்ந்துன்
அன்பனேன் அருள் சார்ந்துய்ய

சரணம்

துரித தாப ஹரணஸ ரவினுத சரண
வரதமா விதரண வர வகுளாபரண

பரித சீத கிரண பரிசுத்தாந்தக்கரண
சரஸ கவிகுஞ்சர தாஸ பரண

மேளம் பதினைந்து – மாயாமாளவகௌள –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

நான் என் செய்வேன் ஸாமி
நாதா நீ அருள் செய்யாவிடில்

அனுபல்லவி

ஆனந்த மா கந்த அனவரதம் உன் அந்த
மான பதம் நினைந்தத்யந்த பக்தியில் முந்த

சரணம்

சேய மாயா மாளவ கௌளாதி
மேள ராக தாள ஸஞ்சார கவிகுஞ்சர தாஸன்
ஆயாதிழைத்த பிழை அது நீ பொறுத்து விழை
நேயா மிகுந்தருளை நீ கொடுத்தருள் ஏழை

மேளம் பதினாறு – சக்ரவாகம் –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுச்ருதி த, கைசிகி நி

பல்லவி

காணக்கண் கோடி வேண்டும்
கருணாகர முருகனைக்(காண)

அனுபல்லவி

ஆணிப்பொன் ஶ்ரீ சுப்ரமணியனை
வெகு கணணீயனை

சரணம்

கடலிடைக்கதிர் உதயமான

கன உக்ர சக்ரவாகமான
அடல் மயில் மீதொளிரும் குஹனை
அனவரத சித் ஸ கனை
மடமயில் வள்ளி குஞ்சரி மண
வாளனைச் செவ்வேள் தனை

திடபக்த கவிகுஞ்சர வர
சீல தாஸ தயாளனை

மேளம் பதினேழு – ஸூர்யகாந்தம் –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

கஞ்சம் கொஞ்சும் செஞ்ஸரண் நின்
தஞ்சம் தஞ்சம் தஞ்சம் ஷண்முகம் நின்

அனுபல்லவி

பஞ்சம் கலிபறந்தோடவும்
நெஞ்சம் நினைந்துனை நாடவும்

சரணம்

குணாகர கோடி ஸூர்யகாந்த
குமார முருகா குருபராநந்த
கணாகண கருணாகர கந்த
கவி குஞ்சர வரதாஸ ஹ்ருத் கந்த

மேளம் பதினெட்டு – ஹாடகாம்பரி –– ஆதிதாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

ஆளலாகாதா அடியேனை
நாதா நீ தான்

அனுபல்லவி

ஆளாய் நின் பொன்னடிக்

கடிமை பூண்டனுதினம்
அறுமுக ஹரகுரு குஹ
பன்னிருகர முருகாவன்றுருக தந் (தாள)

சரணம்

திகம்பரி திரிசூலதரி ஜகம் தரும் சடாதரி
ஹாடகாம்பரி ஹரஸகி ஹரி ஸோதரி ஸுந்தரி தருஸூதனே
அகம் தனில் நினைந்த நல் வரம் தர இசைநத நா
ஆஸ கவிகுஞ்சர தாஸ விச்வாஸனை நேசமொடு

மேளம் பத்தொன்பது – ஜங்காரத்வனி –– மிச்ர சாபு தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

வரம் தரும் ஸாமிநாதா நல்

அனுபல்லவி

கரம் தாரும் காரும் எனை நீர் கடைக்
கண் பாரும் ஆதாரம் தாரும் வாரும்

சரணம்

ஹிரீம்கார ஜங்காரத்வனி யுத
ஓம்கார நாத வண்டார் பூம் பாத
சிருங்கார வர கவிகுஞ்சர தாஸ ஹித
சத் பக்தி சஹித சகலவித

மேளம் இருபது – நடபைரவி –– ரூபக தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி

பல்லவி

அம்போருக பாதமே
நம்பினேன் நின் பொன்

அனுபல்லவி

சம்போ சங்கர பரமேச குருகுஹமே
பரப்ரம்ம ஸ்வரூபமே ஷண்முகமே நின்

சரணம்

மாகாளி மதுரமா நடபைரவி அம்ப
தரு குமார தபகோடி மதனாகார
தேகா சிருங்கார ஸ்ரீகர கவி குஞ்சர
வரதாஸதாகரா மதுரதர நின்

மேளம் இருபத்தி ஒன்று – கீரவாணி –– கண்ட சாபு தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

வேலவா வா வினை தீர வேல் வீர

அனுபல்லவி

சீலபக்த பரிபால ஜெயசீல
கால கால சிவபால கருணாலவால

சரணம்

ஸுகுமார குருபர பன்னிருகர பரசுபாணி
ஸுதர்சனபாணி ஸுகீரவாணீசர்பணி பத
யுக ஸரோருஹ குஹ யுவமாமணி உன
தருளணி கவி குஞ்சர தாஸ ஸத்சிந்தாமணி

மேளம் இருபத்தி இரண்டு – கரஹரப்ரியா –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

கண்பாரைய்யா கந்தா காரையா

அனுபல்லவி

நண்பாரென தன்பாகன

பண்பாகவே பரிபூர்ண கிருபை

சரணம்

மாகருணா மயஸாகர மான மெய் ஞான கர
வாகார் பன்னிருகர ஸ்ரீகர வானீந்திர தரு நேர் உதார
மோகர திமிர திவாகர மோகனவல்லி மனோஹர
ஸ்ரீ கரஹரப்ரிய முதாகர ஜெயகர கவிகுஞ்சர தாஸபர

மேளம் இருபத்தி மூன்று – கௌரிமனோஹரி –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

பாராய் அருள் தாராய் பொருள்
தீராவினை தீர்த்தருள்

அனுபல்லவி

தீரா மயில் வீரா அயில்
குமாரா முகில் உதார கம்பீரா நீ

சரணம்

நீலஹரி மால் சோதரி

வால கௌரீமனோஹரி
பால கவி கரிதாஸ பரி
பாலா பரி வால் ஆதரி

மேளம் இருபத்தி நான்கு – வருணப்ரியா –– ஆதிதாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

சிருங்காரா குமார என் ஜீவாதாரா உதார

அனுபல்லவி

வெங்கோப கோர சூர சம்ஹார தீர வீர மார

சரணம்

அருணகிரிக்குள் அருள் வாக்கருளிய
வாறடியேன் தனக்கும் அருளத் தருணம் இதே
வருணப்ரிய மாமயில் வாகன சுகுண
வரத கவி குஞ்சர தாஸ கருணாகர

மேளம் இருபத்தி ஐந்து – மாரரஞ்சனி –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

மாலாகினேன் வேலா நின் மேல்

அனுபல்லவி

நாலார் மறை மேலாகம
மூலா மதி விசாலா சாலாகம

சரணம்

காரார் அஞ்சனக்கட்குறமின்மோகா
எனவே ஸதா நான் உருக
மார ரஞ்சன மான் மருகான
வர கவி குஞ்சர தாஸன் நின் தாள் மருவ

மேளம் இருபத்தி ஆறு – சாருகேசி –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி

பல்லவி

நீ தான் அப்பா அபார கிருபா
நீ தே நிதேஹி பக்தி பாக்யம்

அனுபல்லவி

நீ தான் அப்பா என்போற் பேதை அடியார்கக்
ஆதார பூதன் அனாத நாதன்

சரணம்

ஆசாரமிலனாயுன் நின் தாழ்கன்பில்
மா நீசனாயினுமே நினையே நினைந்திடவே
மா சாருகேசி வள்ளி சமாசில்
வாகீச வர குஞ்சரதாஸ வாஸன்

மேளம் இருபத்தி ஏழு – ஸரஸாங்கி –– ரூபக தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த காகலி நி

பல்லவி

மலையாதே மனமே வீணே நீ

அனுபல்லவி

மலையது விழினும் தன் தலையாலே தாங்கவே
தலைவன் அறுமுகவன் இலையா

சரணம்

மான்மருகன் வேல்முருகன்
வன ஸரஸாங்கி மணவாளன்
தான் வரகவி குஞ்சர தாஸன் உன்தனை
எந்நாளும் நன்காளும்

மேளம் இருபத்தி எட்டு – ஹரிகாம்போதி –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

நீயே கதி என்தாயே ததி

அனுபல்லவி

நாயேன் அதிபதி
சேயே வானோர் ஸேனாதிபதி

சரணம்

ஆதி அயன் ஹரிகாம்போதி அருள் போத குரு
கோதில் கவி குஞ்சர தாஸன் குலநிதி

மேளம் இருபத்தி ஒன்பது – தீரசங்கராபரணம் –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

எனை ஆளய்யா இவ்வேளையே வந்(தெனை)

அனுபல்லவி

வினையாளனேன் ஆனாலுமெ நான்
உனையே நான் நம்பவில்லையா வேலையா

சரணம்

கோரசூர சம்ஹரா தீர சங்
கரா பரண சங்கர குமார சிருங்
கார கவி குஞ்சர தாஸனே மங்
தார கற்பகம் காரும் போன்றவன் (தெனை)

மேளம் முப்பது – நாகாநந்தினி ––ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

நாயேன் உன்னையே நம்பினேன்
தாயே எனவே நீ என்னை யாள

அனுபல்லவி

ஸ்ரீயே தரு சிவனார் திருச்
சேயே குரு வாயே அருள் தர

சரணம்

மாகாநந்தா மின்னாள் நாண் இடைமின்
நாகாநந்தினி ஞான குஞ்சரி
பாகா கனி பால் போல் இனி
பாவலன் நீ இப தாஸனாம் (நாயேன்)

மேளம் முப்பத்தி ஒன்று – யாகப்ரியா –– ஆதி தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

சம்போ ஸதா சிவ ஸ்ரீத உதார
ஸத்பக்தி ஸாம்ப்ராஜ்ய ப்ரத

அனுபல்லவி

லம்போதர ஸோதர ஸ்ரீதர
அம்போருகர்க் கரிய குஹ வர

சரணம்

மோகக் கடலுள்மூழ்காத மோக
மாகப்பெரு உன் அருட்கடல் மூழ்க
யாகப்ரிய செம்பாகக் கவி
யானைக்கடி யேனுக்கருள் வர

மேளம் முப்பத்தி இரண்டு – ராகவர்த்தனி –– ஆதி தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி

பல்லவி

கலங்காதே மனமே நீ இனமே

அனுபல்லவி

துலங்கெழில் வேலன் பதம் நிதம்
துதி மதி இதே ததி

சரணம்

ஸ்ரீ ராகவர்த்தன பக்த பரிபாலன
குஹன் குணமால் மருகன்
வர கவி குஞ்சர தாஸன் நின் பால்
வருவன் அருள் தருவன்

மேளம் முப்பத்தி மூன்று – காங்கேய பூஷணி –– ரூபக தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

நினை மனமே நீ தீவினை தீரவே குஹனை

அனுபல்லவி

நினை நினை நினைந்துருகி உனை மறந்து (நினை)

சரணம்

நீங்கும் பிணி நீங்கும் கலி நீங்கும் பல தீங்கும்
ஓங்கும் புகழ் ஓங்கும் செல்வம் ஓங்கும் ஆயுள் ஓங்கும்
பாங்காக காங்கேயபூஷண குணமணியை
பத கவிகுஞ்சரதாஸன் பைந்தரு சிந்தாமணியை

மேளம் முப்பத்திநான்கு – வாகதீச்வரி –– ஆதி தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

நாதானு ஸந்தான நன்
மார்க்கமே ஸன்மாரக்கம் மனமே

அனுபல்லவி

ஸீதாபதி வேதா துதி
பாதாரவிந்த பரமானந்த கந்த

சரணம்

தேகாரோக்யம் திடபக்தி பாக்யம்
தீர்க்காயுள் ஸத்ஸந்தான சௌபாக்யம்
வாகதீச்வரீ வரகிருபா கரம்
தரும் வர கவி குஞ்சர தாஸன் தன்

மேளம் முப்பத்தி ஐந்து – சூலினி –– ஆதி தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

பரா முகம தேனோ என்மேல் குரு
பரா இது தருமந்தா னோ (என்மேல்)

அனுபல்லவி

ஒராறுமுக உனையே அல
தொராதரவுமிலையே

சரணம்

அபாரவர கருணாகர
கபால கர திரி சூலினி
சுபால சுர பரிபாலினி
சுதா கவிகுஞ்சரதாஸன் என்மேல்

மேளம் முப்பத்தி ஆறு – சலநாட்ட –– ஆதி தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

ஏதைய்யா கதி எனகக்(ஏதைய்யா)

அனுபல்லவி

மாதயாநிதி உமாபதி சுகுமார
வரகுணநிதி நீ தான் அலதுவேறு (ஏதைய்யா)

சரணம்

பேதையேற் குனருள் காட்டாது என்னோடு
ஏதையா விளையாட்டா
பூதலா சலநாட்டா நின்தாள் தான் கதி
புகழ் கவி குஞ்சர தாஸனுக்கு வேறு(ஏதைய்யா)

# பிரதி மத்தியம மேள கிருதிகள்

மேளம் முப்பத்தி ஏழு – ஸாலகம் –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, பிரதி ம, ப, சுதத் த, சுத்த நி

பல்லவி

கானாமுதம் தா நீ நிதம்
ஞானாமுதஸாகரமே எனும் அமித

அனுபல்லவி

தானாய் அருள் தேனாம் பதம்
நானாவித ரஞ்சிதம் தரும் திவ்ய

சரணம்

மாலாக மகிழ் மருகா குஹா
மதி ஸாலகமே உரு முருகா
கோலாகல கூர் வேலா கவி
குஞ்சர தாஸன் அகம் குளிர் திவ்ய

மேளம் முப்பத்தி எட்டு – ஜலார்ணவம் –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, பிரதி ம, ப, சுத்த த, கைசிகீ நி

பல்லவி

கனகமயூர கமன கம்பீர
காருண்ய குமாரா கலி தீர் உதார

அனுபல்லவி

அனக வேல் வீர அறுமுக மாரா
கணமணி திகழ் அலைவாய் செந்தூரா

சரணம்

அஞ்சலென்றருள் அபயகர தல

செங்கமல விமல வரத கர கமல
ரஞ்சித கர விமல ஜலார்ணவ
கவிகுஞ்சரதாஸ நிமல கமல ஹ்ர்த்பாத

மேளம் முப்பத்தி ஒன்பது – ஜாலவராளி –– கண்ட சாபு தாளம்
ஸ. சுத்த ரி, சுத்த க, பிரதி ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

அனாதரக்ஷக குஹா அரசே நீ வருக மிக
அனாதனேற்கு முருகா நின் அருள் பெருக

அனுபல்லவி

மனாதீத மதிவதனா வாரிஜதளநயனா
ஞானாமுத வசனா எனா நவிலும்

சரணம்

நராளி வெருவிய ஆயிராளி முகன் உயிர் உண்
சராளியாம் சரவணபவ சரபமே ஸ்வர ஜால
வராளி மருவும் குழல் வள்ளி மணவாள குரு
பரா சுபகர கவிகுஞ்சரதாஸன் எனை ஆள

மேளம் நாற்பது – நவநீதம் –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, பிரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

சாமீ இதே நல்ல சமயம்
தந்தருள் அபயம்

அனுபல்லவி

காமிநான் ஆனாலும் கா எனை
கலியுகவரதா கந்தா

சரணம்

பால வேலவா நீ வா வந்தெனை
காலன் அணுகாமலுமே எக்காலும் கா எனை
கோல நவநீத பிரிய கோபாலன் மால்மருகா
கவிகுஞ்சரதாஸனுக்கு நின் அருள் கூடி நீடிடவே

மேளம் நாற்ப்பத்தி ஒன்று – பாவனி –– சாபு தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, பிரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

அஞ்சாதே நெஞ்சமே நீ குமரய்யன் பதம்
தஞ்சமே என்னாளும் என்றும் நீ

அனுபல்லவி

மஞ்சார் சோலை மலையுகர்ந்த கந்த
ஸ்ரீமான் இருக்க பயமேன் உனக்கே

சரணம்

பன்னிருநயன க்ருபாகரன்
பவானி பத்தித பாவனி பாலன்
ஸுவர்ண வேலன் கவிகுஞ்சர தாஸன்
உன்னுள் இருக்க உனக்கேன் க்லேசம் நீ

மேளம் நாறரப்பத்தி இரண்டு – ரகுப்ரியா –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, சுத்த க, பிரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

ஸதாநந்த பக்தி தந்து சாமீ எனையாள் கந்த

அனுபல்லவி

உதார குணசீலா உச்சித
சத்சிதாநந்த சிவபாலா

சரணம்

குகப்ரிய வர ரகுப்ரியா கர குமரகுருபரா நல்
அகப்ரியகுஹ மஹாபிரபோ மஞ்சுள மங்களகரா
ஜகப்ரபோ அறுமக ப்ரபோ சுந்தர
பன்னிரு கர மிகு சுக பிரத
கவிகுஞ்சர தாஸ மனோஹர சுரவர

மேளம் நாற்ப்பத்தி மூன்று – கவாம்போதி –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

விரைவாகவே வினை தீர வேல்
இறைவா அருள்வாய் இத்தருவாய்

அனுபல்லவி

திரைவாய் துரும்பென நான் உறும்
தீய துயரம் தீர்ப்பதுன் பாரம்

சரணம்

புதலோக ஸேனாதிப கம்பீராத்
புதமா கவாம் போதீ கிருபா
நிதி முருகா குஞ்சரதாஸ பாரதி
துதி கொண்டே என் அப்பா அதி

மேளம் நாற்ப்பத்தி நான்கு – பவப்ரியா –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சுத்த த, கைசிகீ நி

பல்லவி

செந்திருவேலன் பதம்
சிந்தை செய் மனமே நிதம்

அனுபல்லவி

கந்தருவாதி தேவரும்
வந்தனுதினம் பரவும்

சரணம்

சம்பு சிவ சங்கர பாலன்
உதார பூதர பூபாலன் இன்ப
கும்பஸம் பவப்பிரிய லோலன் கவி
குஞ்சரதாஸ பரிபாலன்

மேளம் நாற்ப்பத்தி ஐந்து – சுபபந்துவராளி –– மிச்ர சாபு தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

வேலனே வேறே கதி இலனே
நின் பாதமல்லால்

அனுபல்லவி

சீலனே நாரதகான லோலனே
நின் பாலனே நான்

சரணம்

யாழிநேர் மொழியாள் விழி
ஏழிசை சுப பந்துவ ராளியாள்
வள்ளிக்கிசைந்த மணவாளனே
ஏழையேர்க்கிரங்காயேல் நான்
என்செய்வேன் கவி குஞ்சர
தாஸனாம் சொன்னேன் என் மனதாரவே
பிரபுவே விபுவே

மேளம் நாற்பத்தி ஆறு – ஷட்விதமார்க்கிணி –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

அந்தரங்க பக்தி தந்தெனை ஆளய்யா

அரசே நின் பொன்னடிக் கடிமை நான் உய்ய

அனுபல்லவி

சுந்தராங்கஸௌ காங்கேய மா
மரகதாங்க மயூர வர துரங்க

சரணம்

உள்முகம் நோக்கும்கண் ஒளி அருள் நீ
ஷண்மத சம்மத ஷட்விதமாரக்கிணி
முக்கண்ணன் அருள் ஷண்முகக் கண்மணி நல்
வண்ணக் கவிகுஞ்சர தாஸன் என் கண் நீ

மேளம் நாற்ப்பத்தி ஏழு – ஸ்வர்ணாங்கி –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

இகபரசுக மிக அருள் குஹனே
முருக ஷண்முகனே

அனுபல்லவி

மகபதிக்கு பொன்நகர்
அருள் புண்ணியவானே எனக்கு நீ தானே

சரணம்

காரார் பன்னிருகர குமரா கலி தீரவே அருள்
பாராய் அபார வர கிருபாகரா
வீராதிவீர தீர மயூரா ஸ்வர்ணாங்க சுந்தர
மார கவிகுஞ்சரதாஸ மந்தாரா உதாரவர

மேளம் நாற்ப்பத்தி எட்டு – திவ்யமணி ––  ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

அப்பா முருகையனே எப்போதருள்வதெனக்கு
அப்பா பரிபூர்ண கிருபை பிரபோ செப்பா என்

அனுபல்லவி

அப்பனே நின்மீதடியேன்
செப்பும் இசை தமிழ் உலகு
ஒப்பவே சுருதி லயம்
தப்பாமல் பாடிடும் நயம் நானுற

சரணம்

எத்தனையோ பாபம் செய்தேன்
அத்தனையும் நசிக்கவும்
என் திருமனையில் பொன்மின்
நாள் என்னாளும் வசிக்கவும்
உத்தம கவி குஞ்சரதாஸன்
என் உள் ருசிக்கவும்
ஒளிர் திவ்யமணியே ஓயாதுனை நான் பஜிக்கவும்

மேளம் நாற்பத்தி ஒன்பது – தவளாம்பரி –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

காருண்ய கந்த கானாமுதம் ஸந்ததம் தா வா

அனுபல்லவி

பாரேழோ டேழுமே புகழ்
பாகார்பண் தமிழினில் மிகு

சரணம்

தவளகமல வாஸினி தரள மாமணி பூஷணி
தவளமணி மாலினி தவளாம்பரி வாணி
தவளமாமதி போலும் வதன
தவள மேனி மின்னாள் நின் அருளால்
ஸரளமாகவி குஞ்சரதாஸன் என்
நாவில் நின்றினிதே ஊறிப்பெருக

மேளம் ஐம்பது – நாமநாராயணி –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, கைசிகீ நி

பல்லவி

ஏன் மனமே உனக்கிந்த பயம்
தீங்கெது வருமோ இக்கலியில் நமக்கென உலைங் (தேன்)

அனுபல்லவி

மான் மருவும் கரத்தெம்மான் பரவும் பெரு–
மான் குஹனிருக்க நமக்குருமோ அபயம்

சரணம்

ஞானாகர வேலன் நல் நாம நாராயணி பாலன்
நவரஸ கானாமுத சீல கவி குஞ்சர தாஸனை
கண்மணி போல் காத்திட வேள் காத்திருக்கவே

மேளம் ஐம்பத்தி ஒன்று – காமவர்த்தனி –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

கா முருகையா கலியுக மெய்யா
கருணை மால் மருகையா கைய்யாதெனையினும்

அனுபல்லவி

பாமரனே நான் ஆயினும் நின்பத
பக்தி தந்தருளி என்னை நீ முற்றிலுமே

சரணம்

காமதஹனரான சங்கர சிவ
காம வர்த்தனி அருள் குமரா
க்ஷேமகர கவிகுஞ்சர தாஸனாம்
சாமி உனையே நம்பினேன் ஐயா

மேளம் ஐம்பத்தி இரண்டு – ராமபரியா –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, பிரதி ம, ப, சதுசுருதி த, கைசிகீ நி

பல்லவி

சாமீ சதா முத நின் பாத
ஸ்மரணம் தந்தருள் சரணம் ஸதா சிவ

அனுபல்லவி

காமித சுகதாயக கந்தா
ப்ரம்மாநந்தமே மிக

சரணம்

நேமப்ரிய சஜ்ஜன ரக்ஷக ஸ்ரீ
ராமப்ரிய ஸோதரி சுதநிதி
கோமள மிருதுளதர வர கவி
குஞ்சரதாஸனதுள்ளம் அதனிலே

.

மேளம் ஐம்பத்தி மூன்று – கமனச்ரம –– ஆதி தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, பிரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

இகமே சுகம் தரும் ஷண்முகம்
எனவே வருமே பரசுகமுமே

அனுபல்லவி

அகமே புகுந்து அனுதினமுமே நம்
ஆர்த்திகழ் தீர்த்தருளி அனவரதமுமே

சரணம்

நமனாம் அவனையும் வெல்லலாமே
நற் கவிகுஞ்சரதாஸனாமே
கமனச்ரம ஸங்கட வெம் பவ
ஸாகர கரை ஏறலாமே மனமே

மேளம் ஐம்பத்தி நான்கு – விஸ்வம்பரி –– ரூபக தாளம்
ஸ, சுத்த ரி, அந்தர க, பிரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

பரமானந்த பக்தி தந்தருள் கந்த பிரபோ

அனுபல்லவி

வரைமாது உகந்த மைந்தநின் பாதாரவிந்த

சரணம்

இன்பரோடு விஸ்வம்பரி இருகால்
அறியும் பணி சரபம் பணீ முருகா எனும் நின்
அன்பரோடு சேர்ந்தகம் நெகிழ்ந்துருகவே தந்து
அப்பனே கவிகுஞ்சரதாஸனின்
ஆறருள் பருக இசை பெருக

மேளம் ஐம்பத்தி ஐந்து – ச்யாமளாங்கி –– மிச்ர சாபு தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

கந்தா பக்த தருவே நீ எந்தன்
சிந்தாகுலம் தீர்த்தருள் சிவகுருவே

அனுபல்லவி

நந்தா திருவோடும் நல்லருள் சிறந்தே என்
சந்தானமும் தழைத்திட அருள் சுரந்தே

சரணம்

என்தாய் உனக்கினையாய் உலகில் பக்த
மந்தார குடையில் உலகனைத்தும்
தந்தார் கோமள ச்யாமளாங்கி உமை
மைந்தா கவிகுஞ்சர தாஸனுக்குகந்த

மேளம் ஐம்பத்தி ஆறு – ஷண்முகப்ரியா –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சுத்த த, கைசிகீ நி

பல்லவி

சுகமே சுகம் குஹ நாம ஸ்மரண

அனுபல்லவி

அகமேகமே ஆகி அகில
ஜகமே நிறை குஹமாயமாவுரை

சரணம்

பரம சுகம் பஜி மனமே
பரம சிவபால குருகுஹம்
பரம ரச கவிகுஞ்சரதாஸ
பரம பிரிய ஷண்முகப்ரிய வதன

மேளம் ஐம்பத்தி ஏழு – ஸிம்மேந்திரமத்தியமம் –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

உன்னை அல்லால் வேறே கதி எனக்குண்டோ
சொல்வாய் நீயே அருள்வாய் பரமகிருபாநிதி

அனுபல்லவி

கனை கடல் சூழ் உலகம் தனிலே கந்தா
இகபரசுகம் தந்தெனையாளவே

சரணம்

அம்மே எனக்கருள் என் அப்பா எனவே சொல்லியுமே
குஞ்சரதாஸனுமே உனையடைந்தேன்
கைமேல் பலன் அருள் தெய்வமே துணை செய்தருள்
பிரம்மேந்திரற்க்கறிய ஸிம்மேந்திர மத்தியமா

மேளம் ஐம்பத்தி எட்டு – ஹேமவதி –– ரூபக தாளம்
ஸ, சதுதுசுருதி ரி, சாதாரண க, பிரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

மனதே மறவாதே குஹதேவனையே கனவிலும்

அனுபல்லவி

இனிதாம் நலமதனோடு தீங்கெதுதான் வரினுமே

சரணம்

ஸாமி பாதமே சதா நீ மனமே நினைந்திடவே
இஷ்ட காமியங்கள் யாவும் தந்திடுமே
வனறேவு குறமின் ஆமவளோ–
டேமவதி மின்னாள் மருவும் கந்தனுமே
நய கவிகுஞ்சரதாஸன் நமையாளும் சந்ததமே

மேளம் ஐம்பத்தி ஒன்பது – தர்மவதி –– சாபு தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

கந்தா பக்த சிந்தாமணி
என் சிந்தாகுலம் இடிபிணி தீர்த்தருள் நீ

அனுபல்லவி

சந்தானம் சந்தனம் பாரிஜாதம்
மந்தாரம் கற்பகம் நேர் உதாரம்

சரணம்

அருமை யறியா மாந்தர் தம்பால் அலைந்தலைந்து நான் ஏமாந்தேன்
திரியாமலே தர்மவதி உமையாள் தந்த
மைந்த சந்தம் மிகுந்த கவி குஞ்சரதாஸன் குறைகள் சிந்த

மேளம் அறுபது – நீதிமதி –– ரூபக தாளம்
ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, பிரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

மோகனகர முத்துகுமர
ஸ்ரீகரகருணாகர வரம் அருள்

அனுபல்லவி

மாகன மயில்வாகன நறும்
பாகன ம்ருது பாஷித மன

சரணம்

ஆதிசிவனருள் பரஞ்சோதி நினதுபாதமே துதி
நீதிமதி தந்தருள் நீ தயாநிதி
தீதில்லாதகீதச் செஞ்சொற் கவிகுஞ்சர
தாஸநேச கிரிநிவாஸ மந்தஹாஸ வதன

மேளம் அறுபத்தி ஒன்று – காந்தாமணி –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

நாதசுகம் தரு நாதகுஹன் திரு
நாமம் நவின்றிரு நீ மனமே தினமே

அனுபல்லவி

சீதள ரஞ்சித செஞ்சொலார் அமுத
போத புனித ஸங்கீத வினோத

சரணம்

பூந்தார் அணி குழல் காந்தாமணி வள்ளீ
போதக மாத ஸமேதனாம்
தனதான்தே கவிகுஞ்சர தாஸன் சிந்தை
பூந்தேன் நவரஸ பூரித தசவித

மேளம் அறுபத்தி இரண்டு – ரிஷபப்ரிய –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, கைசிகீ நி

பல்லவி

கனநயதேசிக கானரசிக சிகா
மணி நீயே கந்தா எனக் கருள் நீயே – இன்னும்

அனுபல்லவி

கனிநய சொல் பொருள் கனகம்பீரம்
இனிநயச்ருதியோ டியைலயதீர

சரணம்

ஷட்ஜ ரிஷபப்ரிய காந்தார மத்யம

பஞ்சம தைவத நிஷாத வித
ஸப்த ஸ்வர ஸங்கீத கவி குஞ்சர
தாஸன் அனவரதம் தரும் நின் அருள் மய

மேளம் அறுபத்தி மூன்று – லதாங்தி –– கண்ட சாபு தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

கைகூடவேணுமே கந்தா நின்னருள் எனக்கும்

அனுபல்லவி

மெய்கூடு தமிழ்முனி நக்கீரர் அருணகிரிக்கும்
ஐயா நின் அருள் வந்து கூடிய வரது போல்

சரணம்

ஸுதாங்க சோமசுந்தரர் பங்கில் உரை உமா
லதாங்க மீனாங்க நயன பாலா
மாதாங்க சூரனுடல் மாள வேல் வாங்கு கர
தாளாங்க கவிகுஞ்சரதாஸன் செந்தமிழோங்க

மேளம் அறுபத்தி நான்கு – வாசஸ்பதி –– ரூபக தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி

பல்லவி

இகபரசுக தாயகா
வரம் தந்தருள் வள்ளி நாயகா

அனுபல்லவி

குஹபர ஸத்குருவரா ஷண்முக பராத்பரா

சரணம

நீயே கதியே கிருபா நிதியே நல் வாக்கருள்
புரிவாயே வாசஸ்பதி  வாக்பதி இன்னும் என்
தாயே சத்பக்தி பாக்கியம தந்தருள்வாயே
கனநயமொடு சௌபாக்கியம்
குஞ்சரதாஸன் தனக்கு நீயே

மேளம் அறுபத்தி ஐந்து – மேசகல்யாணி –– ஆதி தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

சதாநந்தமே தரும் கந்த வேல்
பாதாரவிந்தமே பஜி மனமே

அனுபல்லவி

கதாநந்த மாகாந்த கடல்
அமுதம் தனயே ஆராயுந்தொருமே

சரணம்

வாசாமகோசரி கௌரி வாணீ
தேகாம்ரு மேனி மேச கல்யாணி
ஆசாரசீலி அபிராமி
அரனாரிடம் பிரிய சிவகாமி
அருள் பாலனே அடியார்க்கருள்

அபயகர ஷண்முகவேலனே
வர கவி குஞ்சரதாஸ பரிபால
வேணமானாகிய

மேளம் அறுபத்தி ஆறு – சித்ராம்பரி –– சாபு தாளம்
ஸ, சதுசுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

ஸாமகானலோலா ஸத்பக்தி தந்தருள்
வடிவேலா ஸகலாகம மூலா

அனுபல்லவி

காமமாதி அறுபகையர போக்கி
சமதமாதி சாதனங்களுண்டாக்கி

சரணம்

அத்தர் நுதர்க்கண் அருள் வாரிக்குகந்த பரி
சித்ராம்பரி கௌரி தந்தருள் புரி
பக்தி மிகு கவிகுஞ்சர தாஸ
பரிபால சீல கருணாலவால பால

மேளம் அறுபத்தி ஏழு – சுசரித்திரா –– ரூபக தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, சுத்த நி

பல்லவி

வேலும் மயிலுமே வெற்றி

எவ்வேளையிலுமே வெல்லுமே

அனுபல்லவி

காலை மாலையுமே மனமே துதி
காலன் வரினுமே கந்தன்

சரணம்

சித்ரகவி நற்கீரன் தத்தை தவிர்த்த தீரன்
கஜவித்ர வீரபத்ர வீரபாகு சோதரன்
ஆறு வத்திர வசிகரன் ஸ்சரித்ர சுகிகரன்
விசித்திர கவிகுஞ்சரதாஸன் மித்திர ருசிகரன்

மேளம் அறுபத்தி எட்டு – ஜோதிஸ்வரூபிணி –– சாபு தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, கைசிகி நி

பல்லவி

கானாமுத பாதம் (கந்த)
இருக்க வேறு பானமீதபிமானம் உனக்கேன் மனமே

அனுபல்லவி

ஞான அமுத சீலன் அருளால் அகில
மேள ராகரத்னாகரத்தில் கடைந்தெடுத்த (கந்த)

சரணம்

சொல்லமுதோடு நல் உபகரணங்களாம்
சுருதி லயமோடு நவரஸமுரவே
துல்லிய கவி குஞ்சர தாஸன் துதி செய்யும்
ஜோதிஸ்வரூபிணி சக்தி வேலன் அருளால் அமையும்

மேளம் அறுபத்தி ஒன்பது – தாதுவரத்தனி –– ஆதி தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சுத்த த, காகலி நி

பல்லவி

சுககர சோமா சுந்தர குமரா
சுபகரம் அருள் அமரா வர

அனுபல்லவி

இஹபரசுகதாயக குஹ சுரநாயக
ஜக ரக்ஷக மால் மனோஹரா

சரணம்

மாதுமலர் திருமங்கல பொற்கலை
மாதோடும் பணி மனோன்மணி அகில
தாதுவர்த்தனி ஸத் கவி குஞ்சர
தாஸ வார்த்தனி அங்கயர்கணி மருவும்

மேளம் எழுபது – நாஸிகாபூஷணி –– மிச்ர சாபு தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சதுசுருதி த, கைசிகீ நி

பல்லவி

தந்தருள் ஐய்யா கந்தனே நீ மெய்யாக

அனுபல்லவி

சிந்தனை சக்தி செயல் எல்லாம் செலுத்தி என்
உன்தனை எனத்தி உய்ந்திட பேசை பக்தி

சரணம்

தேசிக மணி நீ தேஜோமயன் நீ
வாஸ கவிகுஞ்சர தாஸகவாசன் நீ
மாசுக பாஷிணி நாஸிகாபூஷணி
மாசிலா கற்பு மா மாமணி பாலன் நீ

மேளம் எழுபத்தி ஒன்று – கோசலம் –– ரூபக தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி

பல்லவி

கா குஹா ஷண்முகா நீயே கதி இதே ததி

அனுபல்லவி

ஆகுவாகன ஸோதரா தெய்
வானை வள்ளி மனோகரா

சரணம்

சாலவே பாஞ்சால கோசலாதி

நாடெங்கும் நீடவே நின்
சீலமே சொல்லியே இனும் பல
செந்தமிழ் இசை பாடவே
காலன் அணுகாமலே கலியால் நலியாமலே எக்
காலும் கவிகுஞ்சர தாஸனை
கண்ணின் இமை போலே

மேளம் எழுபத்தி இரண்டு – ரஸிகப்ரியா –– ஆதி தாளம்
ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, பிரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி

பல்லவி

அருள் செய வேணுமய்யா
அரசே முருகைய்யா நீ

அனுபல்லவி

மருள் உறவே என்னை மயக்கிடும் மாய வல்
இருள் அறவே ஞானசூரியன் என வந்தோர் சொல்

சரணம்

நிலயா காயம் இலயே இதனை
நிலையென்றெண்ணுவதென மாயம்
நிலையென்றுனையே நினைந்து நான் உய்ய
நேச கவிகுஞ்சர தாஸ ரஸிகப்ரியா

# மங்கள கீர்த்தனம்

இராகம் சுரட்டி (மேளம் 28ல் ஜன்யம்) -- ஆதி தாளம்
ஸ ரி ம ப நி ஸ - ஸ நி த ப ம க ப ம ரி ஸ

பல்லவி

மஙகளம் மயில்வாகன
மாகுமாரனுக்கு

அனுபல்லவி

திங்கள் மா வதனம் திகழும் குற
மங்கை வள்ளிமணாளனுக்கு சுப (மங்களம்)

சரணம்

அம்பிகையாள் வரபாலனுக்கு - விநா
யகஸோதர ஸ்ுகுணாளனுக்கு
சம்பு சங்கர குருசீலனுக்கு குஞ்
சரியை மருவி மகிழ் லோலனுக்கு
வம்பவிழ் தண் கடம்பாரனுக்குத் - திரு
மால்மருகனாம் சுகுமாரனுக்கு
கும்பமுனிக் குபகாரனுக்குக் - கவி
குஞ்சரதாஸன் குடிகாக்கும் வேல்வீரனுக்கு(மங்களம்)

# சுபம்